# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம்பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

## நூல் அறிமுகம்

குண்டலகேசி காப்பியத்தலைவியால் பெயர் பெற்றது.

சுருண்ட கூந்தலை உடையவள் என்பது பொருள்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

சமண சமயத்தைக் கண்டிக்க எழுந்த நூல்

இக்காப்பியத்தை இயற்றியவர் நாதகுத்தனார்

காலம் 10ஆம் நூற்றாண்டு

பெரும்பான்மை விருத்தப்பாவால் அமைந்துள்ளன.

இடையிடையே கலித்துறைச் செய்யுட்களும் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி – ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை காலை 8.50 முதல் 9.50 வரை

- குண்டலகேசி விருத்தம், அகல கவி என்றும் வழங்கும் காப்பியமாகவும் தருக்கநூலாகவும் அமைந்துள்ளது.
- தொல்காப்பியம், யாப்பருங்கலவிருத்தி, வீரசோழிய உரைகளில் குண்டலகேசி செய்யுட்கள் சான்றுகளாகக் காட்டப்பெற்றுள்ளன.
- சீவகசிந்தாமணிக்கு முற்பட்டதாகக் கருதப்பெறுகின்றது.
- காப்பியம் முழுவதும் கிடைக்கவில்லை.
- புறத்திரட்டில் 19 பாடல்கள் கிடைத்துள்ளன.
- குண்டலகேசியின் கதையை நீலகேசியின் உரையால் அறியமுடிகின்றது.
- நீலகேசி சமணசமயப் பெருமையைக் கூறுகின்றது.
- குண்டலகேசி புத்த சமய பெருமையை நிலைநாட்டுகின்றது.
- குண்டலகேசி புத்தர் வாழ்ந்திருந்த காலத்தில் வடநாட்டில் வாழ்ந்த புத்தசமயத் துறவி என்ற கருத்தும் உண்டு.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

## குண்டலகேசி கதைச்சுருக்கம்

- இராசகிருக நாட்டு மந்திரியின் ஒரே மகள் பத்திரை.
- அவள் கொலைத்தண்டனை விதிக்கப்பட்ட கள்வன் (காளன்) ஒருவனைக் காதலித்து, தன் தந்தையால் கொலையுறுவதினின்று காப்பாற்றினாள்.
- கள்வனாகிய காளனையே மணந்தாள். அவனோடு வாழ்ந்து வருகின்ற நாளில் ஒரு நாள் ஊடல் காரணமாக அவனைக் கள்வன் என்று கூறிவிட்டாள்.
- அதனைக் கேட்ட காளன் கடுங்கோபம் கொண்டான்.
- கோபத்தை அடக்கிக் கொண்டு அன்புடையவன் போல் நடித்து வந்தான்.
- கோபத்தை மனதில் கொண்ட கள்வனாகிய காளன் பத்திரையைப் பழி வாங்க சமயம் பார்த்திருந்தான்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- ஒரு நாள் பத்திரையிடம் என் உயிர் காத்த மலைத்தெய்வத்தை வணங்கி வருவோம் என வா! என மலையுச்சிக்கு அழைத்துச் சென்றான்.
- மலையுச்சியில் பத்திரையிடம் காளன், அன்று என்னைக் கள்வன் என்றாய்! இன்று உன்னைக் கொல்லப்போகின்றேன் என்றான்.
- மேலும், பத்திரையிடம், நீ வழிபடுக் கடவுளை வணங்கிக்கொள்! என்று கள்வனாகிய காளன் பத்திரையிடம் கூறினான்.
- காளன் கூறியதைக்கேட்டு பத்திரை திடுக்கிட்டாள்.
- தன்னை தயார்படுத்திக்கொண்ட பத்திரை தற்கொல்லியை முற்கொல்க என்பதை மனதில் கொண்டு தன் காதலை அழித்து நான் வழிபடும் தெய்வம் வேறுண்டோ? வேறில்லை.
- தாங்கள் தான் என் கடவுள் என்று கூறினாள். பின்னர் மலை உச்சியில் பத்திரை காளனை வலம் வருவது போல நடித்து காளனைப் பின்புறமிருந்து தலைக்குப்புறத் தள்ளிவிட்டாள்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- அதன்பின் உலக வாழ்வில் வெறுப்புற்றுச் சமணசமயம் சேர்ந்தாள்.
- சமணசமய கொள்கைப்படி பத்திரையின் கூந்தல் களையப்பட்டது.
- அது மீண்டும் வளர்ந்து சுருண்டிருந்தது.
- சுருண்டும் குண்டும் குண்டுமாக அவள் கூந்தல் இருந்தமையால் குண்டலகேசி என்றழைக்கப்பட்டாள்.
- பத்திரையாகிய குண்டலகேசி சமயவாதம் செய்து வந்தாள்.
- அவ்வாறு செய்து வரும் நாளில் பௌத்தத்துறவியாகிய சாரிபுத்தரிடம் சமயவாதத்தில் தோற்றாள்.
- தோற்றதினால் பௌத்தசமயத்தில் சேர்ந்து மீண்டும் சமயவாதம் செய்து வாழ்ந்தாள் என்று கதை அமைந்துள்ளது.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- கடவுள் வாழ்த்து
- முன்தான் பெருமைக்கண் நின்றான் முடிவு எய்துகாறும்
- நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் தனக்கு என்று
- ஒன்றானும் உள்ளான் பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்
- அன்றே இறைவன் அவன்தாள் சரண் நாங்கள் அன்றே.
- உலகில் முதன்முதலாக மெய்க்காட்சி பெற்று அக்காட்சி வழி நின்று வாழ்ந்தவன் எங்கள் புத்தபெருமான். அத்தகைய புத்தபெருமான் பிறஉயிர்கட்கெல்லாம் நன்மையுண்டாக்கும் நெறியினை ஆராய்ந்துணர்ந்து அதனை மக்கட்கு எடுத்துக் கூறினார். அவரே எங்களுக்கு கடவுள் ஆவான். ஆதலால் அக்கடவுளாகிய புத்தபிரானின் திருவடிகளுக்கு அடைக்கலமாகி வணங்குவோம் என்பது பாடல் பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- அவையடக்கம்
- நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்க இல்லார்
- தீக்குற்ற காதல் உடையார் புகைத்தீமை ஓரார்
- போய்க்குற்றம் மூன்றும் அறுத்தான்புகழ்கூறுவேற்கு என்
- வாய்க்கு உற்ற சொல்லின் வழுவும் வழுஅல்ல அன்றே
- பாடல் பொருள்:
- மெய், மொழி, மனம் என்னும் மூன்றிடத்தும் தோன்றுகின்ற மூவகைக்குற்றங்கள். இவற்றுள் மெய்யில் தோன்றும் குற்றங்கள் கொலை, களவு, காமம் என்பன. மொழியில் தோன்றுவன பொய், குறளை கடுஞ்சொல் பயனில் சொல் என்பன. மனத்திற் தோன்றுவன வெ.்.கல், வெகுளல், பொல்லாக்காட்சி என்பனவாம். இவற்றை நீக்க இந்நூல் செய்தேன் என்பது கருத்து.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 3. மனந்தூயோர்க்கே இன்பமுளவாகும் எனல்
- வாயுவினை நோக்கியுள மாண்டவள நாவாய்
- ஆயவினை நோக்கியுள வாழ்க்கையதுவே போல்
- தீயவினை நோக்குமியல் சிந்தனையும் இல்லாத்
- தூயவனை நோக்கியுள துப்புரவும் எல்லாம்
- பாடல் பொருள்:
- மரக்களங்கள் தனக்கு ஆதாரமாகக் காற்றை எதிர்பார்த்திருப்பது போலவும், உயிரினங்களின் வாழ்வுகளெல்லாம் தத்தமக்கு ஊழ் வரைந்துள்ள வாழ்நாளையே ஆதாரமாகக் குறிகொண்டிருப்பது போலவும், இவ்வுலகத்திலுள்ள இன்பங்களும். புகழ்களும் தீவினை செய்தற்கண் ஆர்வமும், அவ்வழியியங்கும் எண்ணங்களும் சிறிதுமின்றி மனந்தூயவனாகிய நல்லோனையே தமக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளன என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- மெய்த்தவம்
- போர்த்தல் உடை நீக்குதல் பொடித் துகள் மெய்பூசல்
- கூர்த்தபனி ஆற்றுதல் குளித்து அழலுள் நிற்றல்
- சார்த்தர் இடுபிச்சையர் சடைத்தலையர் ஆதல்
- வார்த்தையிவை செய்தவம் மடிந்து ஒழுகல் என்றான்.
- பாடல் பொருள்:
- காவி ஆடை முதலியவற்றால் உடம்பினைப் போர்த்துக்கொள்ளுதலும். ஆடையுடாது விட்டுவிடுதலும், சாம்பல் முதலியவற்றை உடல் நிரம்பப் பூசிக்கொள்ளுதலும், மிக்க பனியினும் மழையினும் நீருட்குளித்து நின்று அவற்றால் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்துக் கோடலும், கோடையின் கண் தீயினுள் நிற்றலும், தம் சமயத்தைச் சார்ந்துள்ள இல்லறத்தார் ஆடுகின்ற பிச்சையை ஏற்றுண்டு திரிதலும், சடை வளர்த்துக் கட்டிய தலையினையுடையதாயும், இன்னோரன்ன செயலெல்லாம் வறிய சொல்லளவே இன்றித் தவவொழுக்கம் ஆகமாட்டா. இனி வாய்மையாகச் செய்கின்ற தவவொழுக்கம் என்னவென்றால், அடங்கி வாழுதலே ஒழுக்கமாகும் என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி – ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்

நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 5. நுகர்வினால் அவா அறுத்தல் கூடாது எனல்
- வகை எழில் தோள்கள் என்றும்
  மணி நிறம் குஞ்சி என்றும்
  புகழ் எழ விகற்பிக்கின்ற
  பொருள் இல் காமத்தை மற்றோர்
  தொகை எழும் காதல் தன்னால்
  துய்த்து யாம் துடைத்தும் என்பார்
  அகை அழல் அழுவந்தன்னை
  நெய்யினால் அவிக்கலாமோ.
- பாடல் பொருள்:

இலக்கண வகுப்பிற்கியைந்த தோள்கள் இவனுடைய தோள்கள் என்றும், இவனுடைய மயிர்க்குடுமி நீலமணியினது நிறம் என்றும் அவற்றிற்கில்லாத புகழ் உண்டாகும்படி பலபடப் பாரித்துக் கூறுவதற்குக்காரணமான வாய்மையின் நோக்குவார்க்கு ஒரு சிறிதும் பொருள் இல்லாததாகிய காமவின்பங்களை ஒரு தொகுதியாகத் தம்பால் தோன்றுகின்ற காமக்கிளர்ச்சியாலே அக்காமக்குணத்தை அழிக்க மாட்டோம் என்று ஒரு சிலர் கூறுவர். ஆவ்வாறு கூறுதல் மடமை எவ்வாறு எனில் எரிகின்ற தீப்பற்றிக்கொண்ட காட்டினைந நெய் பெய்து அவித்தல் முடியுமோ? முடியாது என்பதற்கு ஒப்பாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 6. நுகர்வினால் அவாஅறுத்தல் கூடாது எனல்

- ஆனலென நினைப்பிற் பொத்தி
  அகந்தலைக் கொண்ட காமக்
  கனலினை உவர்ப்பு நீராற்
  கடையற அவித்தும் என்னார்
  நினைவிலாப் புணர்ச்சி தன்னால்
  நீக்குதும் என்று நிற்பார்
  புனலினைப் புனலினாலே யாவர்
  போகாமை வைப்பார்

- பொருள்: நொய்யவிறகினில் தீக்கதுவுமாறு போல நினைவின்கண் விரும்பிக்கொண்டு நெஞ்சத்தை இடமாகக் கொண்டு வளருகின்ற காமமாகிய பெரு நெருப்பை வெறுப்பு என்னும் நீர் ஊற்றி எச்சமின்றி அவித்துவிடுவோம் என்று கருதாராய் நினைவிழந்து அதுவேயாகி அழுந்துதற்குக் காரணமான புணர்ச்சியினாலே அக்காமத்தை அகற்றுவோம் என்று முனைந்து நிற்கின்றனர் மடவோர். மிக்கு பெருகின்ற வெள்ளத்தை மற்றுமொரு வெள்ளத்தாலே அணைவிட்டுத் தடுத்துவைக்கும் ஆற்றலுடையோர் யாருமில்லை என்பதை உணர்வீர் என்பதாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 7. யாக்கை நிலையாமை

- போதர உயிர்த்த ஆவி
புகவுயிர்க் கின்றதேனும்
ஊதியம் என்று கொள்வர்
உணர்வினான் மிக்க நீரால்
ஆதலால் அழிதல் மாலைப்
பொருள்களுக்கு அழிதல் வேண்டா
காதலால் அழுதும் என்பார்
கண் நனி களையல் உற்றார்

- பொருள்:

- வெளியேறிய மூச்சு மீண்டும் உட்புகாமல் போயே விடுதலும் கூடும். ஆதலால் மெய்யுணர்வுடையோர் தாம் உள்வாங்கும் ஒவ்வொரு மூச்சும் தமக்கு ஊதியமாகவே கருதுகின்றனர். அத்துணை நிலையாமை உடையது இவ்வுடம்பு. இதன் அழிவுக்கு வருந்துதல் வேண்டா. இதன் அழிவு கருதி அழுபவர் வீணே வருத்துபவரே ஆவார்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 8. கூற்றுவன் கொடுமை
- அரவு இனம் அரக்கர் ஆளி
  அவைகளும் சிறிது தம்மை
  மருவினால் தீய ஆகா
  வரம்பில் காலத்துள் என்றும்
  பிரிவிலம் ஆகித் தன்சொற்
  பேணியே ஒழுகும் நங்கட்கு
  ஒருபொழுது இரங்க மாட்டாக்
  கூற்றின் யார் உய்தும் என்பார்
- பொருள்: கொடிய நச்சுப் பாம்பினங்களும், இரக்கமென்று ஒரு பொருளில்லாத அரக்கரும், யாளி முதலிய வல்விலங்குகளும் சிறிது காலம் தம்மோடு யாரும் பழகுமிடத்தே அவர்பால் அன்புடையவாய்த் தீமை செய்வன ஆகலாம். எல்லையில்லாததாய் இறந்தகாலத்தில் எல்லாம் நாள்தோறும் தன்னோடு பிரிதலிலமாய் தன் கட்டளையை மேற்கொண்டு ஒழுகி வருகின்ற மாந்தராகிய நம்பொருட்டு ஒரு சிறிது பொழுதேனும் இரங்கும் இயல்பு இல்லாத கூற்றுவனுக்குத் தப்பி யாங்கள் உய்திருக்கவல்லேம் என்று கூறவல்லார் யாவரே உள்ளார் யாருமில்லை.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை
காலை 8.50 முதல் 9.50 வரை

- 9. கூற்றுவன் கொடுமை

- பாளை ஆம் தன்மை செத்தும்
  பாலனாம் தன்மை செத்தும்
  காளையாம் தன்மை செத்தும்
  காமுறும் இளமை செத்தும்
  மீளும் இவ் வியல்பும் மின்னே
  மேல்வரும் மூப்பும் ஆகி
  நாளும் நாள் சாகின்றாமால்
  நமக்கு நாம் அழாதது என்னோ

- பொருள்: நாம் நம்முடைய உடம்பு நம் தாய்மாரின் வயிற்றின்கண் கருவாகியிருந்த நிலைமையிலிருந்து இறந்தும், பின்னர் எய்திய குழவிப் பருவம் இறந்தும், அப்பருவத்தின் பின் வந்தெய்திய காளைப்பருவம் இறந்தும், அதன்பின்னர் வந்ததும் காமுற்று மகளிரை மருவுதற்கியன்றதும் ஆகிய இளமைப் பருவமும் இறந்தும் வந்துள்ளோம். இவ்வாறு மீண்டு மீண்டும் இறக்கின்ற இந்த இயல்பினையே இப்பொழுதே இதற்கு மேலே வருகின்ற முதுமைப்பருவம் வருகின்றபோது இவ்வாறே யாம் ஒவ்வொரு நாளும் இறப்பினை எய்துகின்றோம் அல்லவா? பிறர் சாகின்றதற்கு அழுகின்ற யாம் நமது சாவிற்கு நாமே அழாததற்கு காரணம் தான் என்னவோ? என்பது பாடல் பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 குண்டலகேசி – ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்

நாள்: 16/17/.11.2020 நேரம் : காலை 9.50 முதல் 10.50 வரை - காலை 8.50 முதல் 9.50 வரை

- இரண்டு மதிப்பெண் வினாக்கள்
- 1. குண்டலகேசி – பொருள் தருக.
- 2. குண்டலகேசி எந்த சமயத்தை சேர்ந்தது?
- 3. குண்டலகேசி இயற்றியவர் யார்?
- 4. குண்டலகேசி எந்த நூற்றாண்டை சேர்ந்தது?
- 5. குண்டலகேசி எந்த பாவினால் அமைந்தது?
- குறுவினாக்கள்
- 1. குண்டலகேசி கதைச்சுருக்கத்தினை எழுதுக.
- 2. குண்டலகேசி நூற்குறிப்பை எழுதுக.
- நெடுவினாக்கள்
- 1. குண்டலகேசி நூலமைப்பும் கதைப்பொருளும் குறித்து எழுதுக.
- 2. குண்டலகேசியில் இடம் பெற்றுள்ள அறக்கருத்துக்களை எழுதுக.